Q.C - 57

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Departmental Test for appointment as Assistant Audit Officers in the Audit wing of the Hindu Religious and Charitable Endowments (Admn.) Department - Part - I(a) Hindu Religious and Charitable Endowments (A) Act, 1959 and the Rules framed thereunder and other Acts (Theory & Practical) (Without Books) | 108 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.

QE-057

1. Under which section the Government may extend the provisions of Hindu religious and charitable Endowments Act 1959 to Jain Religious Institutions and Endowments?

அரசு பின்வருவனவற்றுள் எந்த பிரிவின் கீழ் 1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவின் விதிகளை சமண நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்களுக்கு நீட்டிப்பு செய்யலாம்?

(A) Section 2
சட்டப் பிரிவு 2

(B) Section 3
சட்டப் பிரிவு 3

(C) Section 5
சட்டப் பிரிவு 5

(D) Section 8
சட்டப் பிரிவு 8

2. ____________ means any person or body by whatever designation known in whom or in which the administration of a religious Institution is vested.

அறநிறுவனங்களில் நிர்வாக பொறுப்பு வகிப்பவரும், எந்த பதவியின் வாயிலாகவும் அழைக்கப்படும் நபர் அல்லது அமைப்பு ____________ என பொருள்படும்.

(A) The Executive officer
செயல் அலுவலர்

(B) The Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) The trustee
அறங்காவலர்

(D) The Hereditary trustee
பரம்பரை அறங்காவலர்

3. The term of office of non-official members of Advisory committee shall be

ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றுள்ள அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் ____________ ஆக இருக்கும்.

(A) Five years
ஐந்து ஆண்டுகள்

(B) Three years
மூன்று ஆண்டுகள்

(C) one year
ஓராண்டு

(D) Six Months
ஆறு மாதங்கள்

4. The Cost of auditing the accounts of Religious Institutions shall be paid in the first instance out of the

அறநிறுவனங்களின் தணிக்கைக்கான கட்டணங்கள் முதலில் ____________ ல் இருந்து வழங்கப்படுகிறது.

(A) Temple fund
திருக்கோயில் நிதி

(B) Common Good fund
பொது நல நிதி

(C) Surplus fund of the Religious Institution
அறநிறுவனங்களின் உபரி நிதி

(D) Consolidated fund of the state
மாநில அரசின் ஒருங்கிணைந்த நிதி

5. A person shall be disqualified for being appointed as and for being a trustee of a religious Institution if

பின்வருவனவற்றுள் எந்த செயலில் ஈடுபட்டிருந்தால் ஒருவர் அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமிக்கப்படவோ அல்லது இருக்கவோ தகுதி இழக்க நேரிடும்

(A) he has acted adverse to the interest of the Institution
அறநிறுவனங்களின் நலனுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டிருந்தால்

(B) he is employed
வேறொரு வேலையில் இருந்தால்

(C) he is wealthy
பணம் படைத்தவராக இருந்தால்

(D) he runs any business
ஏதேனும் வியாபாரம் செய்து கொண்டிருந்தால்

6. The Property Register in respect of maths and specific endowments attached to maths has to be sent to ———— for approval

மடங்கள் மற்றும் மடங்களை சார்ந்த குறிப்பிட்ட அறநிலையங்களை பொறுத்தமட்டில் சொத்துப் பதிவேடு அங்கீகாரம் வேண்டி ________ க்கு அனுப்பப்பட வேண்டும்.

(A) the Government
அரசு

(B) the Minister, H.R. and C.E.
அமைச்சர், அறநிலையத்துறை

(C) the Commissioner
ஆணையர்

(D) the Joint Commissioner
இணை ஆணையர்

7. The maximum period of lease of immovable property belonging to the Religious Institutions shall be

அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான அதிகபட்ச குத்தகை காலம் ________ ஆகும்.

(A) five years
ஐந்து ஆண்டுகள்

(B) ten years
பத்து ஆண்டுகள்

(C) three years
மூன்று ஆண்டுகள்

(D) twenty years
இருபது ஆண்டுகள்

8. Under section 36 of Hindu Religious and Charitable Endowments Act 1959 ——— can be made with the previous sanction of the commissioner.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 36 ன் கீழ் ஆணையரின் முன் அனுமதியுடன் __________ மேற்கொள்ளப்படலாம்.

(A) Sale of immovable property
அசையா சொத்துக்களின் விற்பனை

(B) Utilisation of surplus fund
உபரி நிதியை பயன்படுத்துதல்

(C) Inspection of property
சொத்துக்களின் ஆய்வு

(D) Preparation of property register
சொத்துப் பதிவேடு தயாரித்தல்

9. The amount of quit rent payable by the tenant in case of enfranchisement of lands etc. held by a Devadasi shall be determined by

அறநிறுவனங்களின் சேவைகளுக்காக தேவதாசிகளுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் முதலியனவற்றிக்கு வாடகைதாரர்களுக்கு உரிமை ரத்து வரியினை __________ ல் நிர்ணயம் செய்யப்படலாம்.

(A) The commissioner
ஆணையர்

(B) The Joint Commissioner
இணை ஆணையர்

(C) The District collector
மாவட்ட ஆட்சியர்

(D) The Government
அரசு

10. Who is the competent authority to sanction compromise of legal proceedings of a religious Institutions?

அறநிறுவனங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளின் சமரசம் குறித்தான உத்தரவுகள் வழங்க உரிய அதிகாரம் படைத்த அலுவலர் யார்?

(A) the Government
அரசு

(B) the Commissioner
ஆணையர்

(C) the Joint Commissioner
இணை ஆணையர்

(D) the Assistant Commissioner
உதவி ஆணையர்

11. Under which section of Hindu Religious and Charitable Endowments Act 1959 the commissioner may appoint and executive officer for any Religious Institution other than a math or a specific endowment attached to a math.

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் மடங்கள் மற்றும் மடங்களுடன் இணைக்கப்பட்ட குறிப்பிட்ட அறநிலையங்களை தவிர இதர அறநிறுவனங்களுக்கு ஆணையரால் செயல் அலுவலர்கள் நியமிக்கப்படலாம்

(A) Section 42
சட்டப் பிரிவு 42

(B) Section 43
சட்டப் பிரிவு 43

(C) Section 44
சட்டப் பிரிவு 44

(D) Section 45
சட்டப் பிரிவு 45

12. The Religious Institutions whose annual income is not less than two lakh rupees but is less than ten lakh rupees is classified under ———— of the Hindu Religious and charitable Endowments Act 1959

ஆண்டு வருமானம் இரண்டு இலட்சத்திற்கும் மேலும் பத்து இலட்சத்திற்கு கீழும் உள்ள அறநிறுவனங்கள் 1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு ———— ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(A) Section 46(ii)
சட்டப் பிரிவு 46(ii)

(B) Section 46(iii)
சட்டப் பிரிவு 46(iii)

(C) Section 46(i)
சட்டப் பிரிவு 46(i)

(D) Section 46(iv)
சட்டப் பிரிவு 46(iv)

13. Who shall constitute a Board of trustees in respect of Religious Institutions falling under clause (iii) of section 46 of Hindu Religious and Charitable Endowments Act 1959?

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 46(iii)–ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட அறநிறுவனங்களை பொறுத்தமட்டில் அறங்காவலர் குழு அமைக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது ?

(A) the joint commissioner
இணை ஆணையர்

(B) the commissioner
ஆணையர்

(C) the Government
அரசு

(D) the Assistant commissioner
உதவி ஆணையர்

14. Under section 49 of Hindu Religious and charitable Endowments Act 1959, in respect of non-listed Religious Institutions ———— is vested with the power to appoint trustees including fit persons or constitute a Board of trustees

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 49 ன் கீழ் பட்டியலில் சேராத அறநிறுவனங்களை பொறுத்தமட்டில் அறங்காவலர்கள். தக்கர் நியமனம் அல்லது அறங்காவலர் குழு அமைப்பதற்கான அதிகாரம் ———— க்கு வழங்கப்பட்டுள்ளது.

(A) the Assistant commissioner
உதவி ஆணையர்

(B) the joint commissioner
இணை ஆணையர்

(C) the commissioner
ஆணையர்

(D) the Government
அரசு

15. The Appropriate authority who shall have power to suspend, remove or dismiss trustees in respect of any trustee of Religious Institutions included in the list published under 46(ii) of Hindu Religious and charitable endowments Act 1959 is

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 46(ii) ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட அறநிறுவனங்களின் அறங்காவலர்களை இடைநிறுத்தம், நீக்கம் அல்லது பதவி நீக்கம் செய்ய பொருத்தமான அதிகாரம் பெற்ற அலுவலர்

(A) the Government
அரசு

(B) the joint Commissioner
இணை ஆணையர்

(C) the Commissioner
ஆணையர்

(D) the Assistant commissioner
உதவி ஆணையர்

16. Any office holder or servant of a Religious Institution punished by a trustee can file an appeal to the authorities concerned within ———— from the date of receipt of the order

அறநிறுவனங்களில் அறங்காவலர்களால் தண்டனை வழங்கப்பட்ட அலுவலர் அல்லது பணியாளர்கள் அவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற ———— க்குள் உரிய அலுவலர்களிடம் மேல் முறையீடு செய்யலாம்.

(A) One month
ஒரு மாதத்திற்குள்

(B) Two months
இரண்டு மாதத்திற்குள்

(C) Fifteen days
பதினைந்து நாட்களுக்குள்

(D) Five months
ஐந்து மாதத்திற்குள்

17. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959, the trustee of a Religious Institution subject to the directions of the commissioner shall have power to fix fees for services and determine their apportionment

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அறநிறுவனங்களின் அறங்காவலர்கள் ஆணையரின் வழிகாட்டுதலுக்கு இணங்க சேவைகளுக்கான கட்டணங்கள் நிர்ணயம் செய்தல் மற்றும் அவற்றை பகிர்தளித்தல் ஆகியவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

(A) Section 57
சட்டப் பிரிவு 57

(B) Section 58
சட்டப் பிரிவு 58

(C) Section 59
சட்டப் பிரிவு 59

(D) Section 60
சட்டப் பிரிவு 60

18. The trustee of a Religious Institution shall send proposals for altering the dhittam or scale of expenditure to the authorities concerned every

அறநிறுவனங்களின் அறங்காவலர்கள் __________ ஆண்டுக்கொருமுறை திட்டம் அல்லது சேவைகளுக்கான வரவு செலவு விவரங்களில் மாற்றம் செய்திட உரிய அலுவலர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

(A) One year
ஓராண்டு

(B) Two years
இரண்டு ஆண்டுகள்

(C) Three years
மூன்று ஆண்டுகள்

(D) Four years
நான்கு ஆண்டுகள்

19. The commissioner may institute suit for removal of trustee of a math or specific endowment attached to maths for the adoption of devices to convert the income of institution or of the funds or properties thereof into

மடங்கள் மற்றும் மடங்களுடன் இணைக்கப்பட்ட குறிப்பிட்ட அறநிலையங்களின் மடாதிபதிகள் அவற்றின் வருவாய், நிதிகள் அல்லது சொத்துக்களை தமது __________ ஆக மாற்றம் செய்யும் முறைகளை கையாண்டால் அவர்களை நீக்கம் செய்வதற்கான வழக்குகள் ஆணையரால் தொடுக்கப்படலாம்.

(A) Pathakanika
பாதகாணிக்கை

(B) Surplus fund
உபரி நிதி

(C) Fund of the maths
மடங்களின் நிதி

(D) Own fund
தமது நிதி

20. __________ may take steps and pass orders as he thinks proper for the temporary custody and protection of the endowments of the math when a vacancy occurs or in case of any disputes.

மடங்களின் நிர்வாகத்தில் காலியிடங்கள் ஏற்படும் தருவாயிலும், வேறு சிக்கல்கள் ஏற்படும் தருவாயிலும் __________ ஆல் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மடங்களின் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தற்காலிக நிர்வாகம் குறித்து உத்தரவுகள் வழங்கப்படலாம்.

(A) the Government
அரசு

(B) the commissioner
ஆணையர்

(C) the joint commissioner
இணை ஆணையர்

(D) the Assistant commissioner
உதவி ஆணையர்

21. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959, the Joint commissioner has power to inquire into and decide whether a trustee holds or held office as a hereditary trustee?

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் ஒரு அறங்காவலர் பரம்பரை அறங்காவலரா என்பது குறித்து விசாரணை செய்து முடிவு செய்ய இணை ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) Section 63(a)
சட்டப் பிரிவு 63(a)

(B) Section 63(b)
சட்டப் பிரிவு 63(b)

(C) Section 63(c)
சட்டப் பிரிவு 63(c)

(D) Section 63(d)
சட்டப் பிரிவு 63(d)

22. The commissioner may issue notice to show cause why Institution should not be notified under section 71 of Hindu Religious and charitable Endowments Act 1959 if he receives complaint of

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 71 ன் கீழ் அறநிறுவனங்களில் __________ குறித்து புகார்கள் வரப்பெற்றால் மேற்படி அறநிறுவனத்தினை ஏன் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரக்கூடாது என்பதற்கான காரணம் காட்டும் அறிவிப்பு ஆணையரால் வழங்கப்படும்.

(A) Mismanagement
முறையற்ற நிர்வாகம்

(B) Trustees
அறங்காவலர்கள்

(C) Adverse remarks about trustees
அறங்காவலர்கள் குறித்து எதிர்மறையான கருத்துகள்

(D) Poor maintenance
மோசமான பராமரிப்பு

23. Any person who unauthorisedly occupies any property belonging to a religious Institution without the approval of the competent authority is called

அறநிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை உரிய அலுவலரின் அங்கீகாரம் இன்றி அத்துமீறி அனுபவித்து வருபவர் __________ என அழைக்கப்படுவர்.

(A) Lease holder
குத்தகைதாரர்

(B) Tenant
வாடகைதாரர்

(C) Encroacher
ஆக்கிரமிப்புதாரர்

(D) Sub tenant
உள் வாடகைதாரர்

24. __________ shall not be granted by any court in respect of any proceedings taken or about to be taken by the joint commissioners under section 78 of Hindu Religious and charitable Endowments Act 1959

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 78 ன் கீழ் இணை ஆணையரால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றம் எவ்வித __________ பிறப்பிக்க இயலாது.

(A) Injunction
தடை உத்தரவு

(B) Eviction
ஆக்கிரமிப்பு அகற்ற உத்தரவு

(C) Summons
அழைப்புகள்

(D) Decree
ஆணை

25. When a lessee loses possession of any land shall be paid to the Religious Institution as determined by the Tribunal.

குத்தகைதாரர் தன் வசம் உள்ள நிலங்களை இழக்க நேரிட்டால் தீர்ப்பாய நிர்ணய உத்தரவுப்படி அறநிறுவனங்களுக்கு அதற்குண்டான __________ ஐ வழங்க நேரிடும்.

(A) Penalty
அபராதம்

(B) Compensation
இழப்பீடு

(C) Quit rent
உரிமை ரத்து வரி

(D) Deposit
வைப்புத் தொகை

26. The budget showing the probable receipts and disbursement in respect of listed institutions under section 46 of H.R & C.E. Act 1959 has to be sent to the __________ for approval.

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 46 ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட அறநிறுவனங்களின் உத்தேச வரவு செலவுகள் குறித்த திட்டம் __________ க்கு அங்கீகாரம் வேண்டி அனுப்பப்பட வேண்டும்.

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Government
அரசு

27. If necessity arises to modify the provisions made in the budget with regard to the receipts or to the distribution of the amount to be expended ———— has to be submitted for approval.

அறநிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுத் திட்டத்தில் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படின் ———— தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

(A) Detailed explanation
விரிவான விளக்கங்கள்

(B) Revised budget
திருத்திய வரவு செலவு திட்டம்

(C) Detailed estimate
விரிவான மதிப்பீடு

(D) Receipts and charges statement
வரவு செலவு பட்டியல்

28. The trustee of every Religious Institution shall keep regular accounts of all ———— for each fasli years separately

அறநிறுவனங்களின் அறங்காவலர்கள் ———— க்கான கணக்குகளை ஒவ்வொரு பசலிக்கும் தனித்தனியே பேணப்பட வேண்டும்.

(A) Receipts and disbursements
வரவு மற்றும் செலவுகள்

(B) Assets and liabilities
சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

(C) Investments
முதலீடுகள்

(D) Deposits
வைப்புத் தொகைகள்

29. The audit which takes place as and when the expenditure is incurred in a religious institution is called

அறநிறுவனங்களில் செலவுகள் மேற்கொள்ளப்பட்ட உடனுக்குடன் தணிக்கை செய்வது ———— ஆகும்.

(A) Departmental Audit
துறை தணிக்கை

(B) Accountant General Audit
மாநில கணக்காயர் தணிக்கை

(C) Internal Audit
உள்துறை தணிக்கை

(D) Concurrent Audit
உடனிகழ்வு தணிக்கை

30. If a trustee of any Religious Institutions was guilty of irregular, illegal or improper expenditure as pointed out in the audit report ——————— may be passed against him by the competent authority to recover the loss.

அறநிறுவனங்களின் அறங்காவலர்களால் ஒழுங்கற்ற, சட்டவிரோத அல்லது முறையற்ற செலவுகள் ஏதும் செய்யப்பட்டிருப்பதாக தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தால் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரால் ___________ மூலம் இழப்பு தொகை வசூலிக்கப்படலாம்.

(A) Order of surcharge
அபராதம் சுமத்துதல் ஆணை

(B) Disciplinary action
ஒழுங்கு நடவடிக்கை

(C) Penalty imposition
தண்டனை சுமத்துதல்

(D) Criminal action
குற்றவியல் நடவடிக்கை

31. If the annual income of a Religious Institution exceeds Rs. 5 lakhs the rate of audit fees will be

அறநிறுவனங்களின் ஆண்டு வருமானம் ரூ.5 இலட்சத்திற்கும் மேல் இருந்தால் தணிக்கை கட்டணத்தின் சதவீதம் ___________ ஆக இருக்க வேண்டும்.

(A) 4%
4%

(B) 1.5%
1.5%

(C) Nil
இல்லை

(D) 6%
6%

32. The remuneration and other expenses of the Receiver appointed by the District collector in order to recover arrears of an Religious Institution shall be paid

அறநிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வசூலிக்க மாவட்ட ஆட்சியரால் பெறுநர் (Receiver) பதவியில் நியமிக்கப்படும் அலுவலரின் சம்பளம் மற்றும் இதர செலவுகள் ___________ ல் இருந்து வழங்கப்பட வேண்டும்.

(A) By the Revenue Department
வருவாய் துறை

(B) By the Hindu Religious and charitable Endowments Department
இந்து சமய அறநிலையத்துறை

(C) Out of the income of the Institution concerned
சம்பந்தப்பட்ட அறநிறுவத்தின் வருவாய்

(D) By the Government Fund
அரசின் நிதி

33. The commissioner shall out of ———— repay to the Government sums paid by the Government under sub-section (4) of section 92 and loans received from the Government.

அரசால் செலுத்தப்பட்ட சட்டப்பிரிவு 92 ன் கீழுள்ள உப பிரிவு (4) ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான இனங்களுக்கும் மற்றும் அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களையும் ________ மூலம் ஆணையரால் அரசுக்கு திரும்ப செலுத்தப்பட வேண்டும்.

(A) Common Good fund
பொது நல நிதி

(B) Endowments Administration fund
அறநிலையங்களின் நிர்வாக நிதி

(C) Surplus fund
உபரி நிதி

(D) Reserve fund
ஒதுக்கு நிதி

34. The devaswon ———— fund shall be administered subject to the direction and control of the commissioner

தேவஸ்வாம்களின் ________ நிதி ஆணையரின் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டுக்குட்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும்.

(A) Surplus fund
உபரி நிதி

(B) Reserve fund
ஒதுக்கு நிதி

(C) Thiruppani fund
திருப்பணி நிதி

(D) Administration fund
நிர்வாக நிதி

35. Which section of the Hindu Religious and charitable Endowments Act 1959 prevents trustees of Religious Institutions from lending or borrowing moneys without sanction?

1959 ஆம் வருட இந்து சமய அறநிலையச் சட்டத்தின் எந்த பிரிவு அறநிறுவனங்களின் அறங்காவலர்களை உரிய அங்கீகாரம் இல்லாமல் கடன் பெறவோ கொடுக்கவோ இடம் அளிக்காது ?

(A) Section 172
சட்டப் பிரிவு 172

(B) Section 173
சட்டப் பிரிவு 173

(C) Section 174
சட்டப் பிரிவு 174

(D) Section 175
சட்டப் பிரிவு 175

36. Under section 116 of the Hindu Religious and charitable Endowments Act 1959, __________ may by notification make rules to carry out the purpose of the Act.

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 116 ன் கீழ் __________ இச்சட்டம் எந்நோக்கங்களுக்காக வகுக்கப்பட்டதோ அதனை நிறைவேற்ற உரிய அறிவிப்புகளை வழங்கி விதிகளை உருவாக்கலாம்.

(A) the Government
அரசு

(B) the High Court
உயர் நீதிமன்றம்

(C) the Advisory committee
ஆலோசனை குழு

(D) the Governor
ஆளுநர்

37. The quorum for the advisory committee shall be
ஆலோசனை குழு கூட்டத்தில் முக்கிய முடிவுகளை எடுக்க தேவைப்படும் நபர்கள்

(A) Three
மூன்று

(B) Four
நான்கு

(C) Five
ஐந்து

(D) Eight
எட்டு

38. Who shall be the convenor of the meetings of the District committee?
மாவட்ட அளவிலான குழு கூட்டத்தை கூட்ட அதிகாரம் பெற்ற அலுவலர் யார்?

(A) the Government
அரசு

(B) the Commissioner
ஆணையர்

(C) the Assistant commissioner of the district concerned
சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி ஆணையர்

(D) the collector of the district concerned
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்

39. In case of Institutions subject to concurrent audit, the trustee shall make available each month's accounts to the auditor before

உடனிகழ்வு தணிக்கை அமலில் உள்ள அறநிறுவனங்களின் அறங்காவலர்கள் ஒவ்வொரு மாத கணக்குகளையும் __________ க்குள் தணிக்கையாளருக்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(A) 20th of the succeeding month
அடுத்த மாதம் 20 ஆம் தேதிக்குள்

(B) 10th of the succeeding month
அடுத்த மாதம் 10 ஆம் தேதிக்குள்

(C) 15th of the succeeding month
அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்குள்

(D) 2nd of the succeeding month
அடுத்த மாதம் 2 ஆம் தேதிக்குள்

40. __________ Shall have power to a vary or Cancel an order of delegation

அதிகார பகிர்வு குறித்தான ஆணைகளில் மாற்றம் அல்லது ரத்து செய்ய அதிகாரம் படைத்தவர்

(A) the Government
அரசு

(B) the Commissioner
ஆணையர்

(C) the Secretary, H.R. and C.E.
செயலர், இந்து சமய அறநிலையத்துறை

(D) the Minister, H.R and C.E.
அமைச்சர், இந்து சமய அறநிலையத்துறை

41. The executive authority of a Religious Institution shall not repair or alter any jewel or valuable without

அறநிறுவனங்களின் நிர்வாக பொறுப்பில் இருக்கும் அறங்காவலர்கள் __________ இன்றி நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை பழுது பார்க்கவோ மாற்றவோ கூடாது.

(A) Prior permission of the Commissioner
ஆணையரின் முன் அனுமதி

(B) Prior permission of the Government
அரசின் முன் அனுமதி

(C) Prior permission of the Joint Commissioner
இணை ஆணையரின் முன் அனுமதி

(D) Prior permission of the Trust board
அறங்காவலர் குழுவின் முன் அனுமதி

42. Where the Religious Institution has an Executive officer the jewels and valuables shall be in the

எந்தெந்த அறநிறுவனங்களின் நிர்வாக பொறுப்பில் செயல் அலுவலர் உள்ளனரோ அந்த அறநிறுவனங்களின் நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் __________ வசம் இருக்க வேண்டும்.

(A) Custody of Executive Officer
செயல் அலுவலர் பொறுப்பில்

(B) Joint custody of Executive officer and trustees
செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர் கூட்டு பொறுப்பில்

(C) Custody of board of trustees
அறங்காவலர் குழு பொறுப்பில்

(D) Joint custody of Assistant Commissioner and Executive officer
உதவி ஆணையர் மற்றும் செயல் அலுவலர் கூட்டு பொறுப்பில்

43. Who shall be the approving authority of the reports of appraisements of jewels and valuables relating to senior grade Institutions?

முதுநிலை திருக்கோயில்களை பொறுத்தமட்டில் நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களுக்கான மதிப்பீட்டறிக்கையினை அங்கீகரிக்க உரிய அதிகாரம் பெற்ற அலுவலர் யார்?

(A) the joint Commissioner
இணை ஆணையர்

(B) the Commissioner
ஆணையர்

(C) the Government
அரசு

(D) the Assistant Commissioner
உதவி ஆணையர்

44. All matters relating to the administration of the Religious Institution shall be decided at

அறநிறுவனங்களின் நிர்வாகம் தொடர்பான அனைத்து விஷயங்களும் __________ ல் முடிவு செய்யப்பட வேண்டும்.

(A) The meetings of the Board of trustees
அறங்காவலர் குழு கூட்டங்களில்

(B) The religious Institutions
மத அறநிறுவனங்களில்

(C) The office of the Assistant Commissioner
உதவி ஆணையர் அலுவலகத்தில்

(D) the office of the Commissioner
ஆணையர் அலுவலகத்தில்

45. ———— shall not be entitled to vote in the meetings of the board of trustees.

அறங்காவலர் குழு கூட்டத்தில் ________ ஆல் வாக்களிக்க இயலாது.

(A) The chairman
தலைவர்

(B) The Executive officer
செயல் அலுவலர்

(C) The Hereditary Trustee
பரம்பரை அறங்காவலர்

(D) The Trustee
அறங்காவலர்

46. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959 the office holders and servants of the Religious Institutions may be punished.

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அறநிறுவனங்களின் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு தண்டனை வழங்கலாம்.

(A) Section 56
சட்டப் பிரிவு 56

(B) Section 57
சட்டப் பிரிவு 57

(C) Section 58
சட்டப் பிரிவு 58

(D) Section 59
சட்டப் பிரிவு 59

47. Pending disposal of the grave charges against the office- holder or servant the trustee may place him

அறநிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர் அல்லது பணியாளர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருப்பின் அறங்காவலர்களால் அப்பணியாளர்கள் ________ செய்யப்படலாம்.

(A) In the lower category of post
கீழ்நிலை பதவிக்கு பதவியிறக்கம்

(B) In another Religious Institution
மற்றொரு அறநிறுவனத்திற்கு மாறுதல்

(C) Under Suspension
பணியிடை நீக்கம்

(D) Under the control of the Assistant commissioner
உதவு ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ்

48. If the annual income of the Religious Institution exceeds Rs. 2,00,000/- the amount to be deducted in lieu of pooja expenses shall be

அறநிறுவனங்களின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- க்கும் மேலாக இருப்பின் கழிக்கப்பட வேண்டிய ஒரு கால பூஜை செலவுகளின் உச்சவரம்பு __________ ஆக இருக்க வேண்டும்.

(A) Rs. 2,000/- or the actual cost of oru kala pooja whichever is less
ரூ. 2,000/- (அ) வாஸ்தவ ஒரு கால பூஜை செலவு எது குறைவோ

(B) Rs. 5,000/- or the actual cost of oru kala pooja whichever is less
ரூ. 5,000/- (அ) வாஸ்தவ ஒரு கால பூஜை செலவு எது குறைவோ

(C) Rs. 7,500/- or the actual cost of oru kala pooja whichever is less
ரூ. 7,500/- (அ) வாஸ்தவ ஒரு கால பூஜை செலவு எது குறைவோ

(D) Rs. 10,000/- or the actual cost of oru kala pooja whichever is less
ரூ. 10,000/- (அ) வாஸ்தவ ஒரு கால பூஜை செலவு எது குறைவோ

49. If the annual income of the Religious Institution not exceeds Rs. 5,00,000/- the rate of audit fees will be

அறநிறுவனங்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,00,000/- க்கும் குறைவாக இருந்தால் தணிக்கை கட்டணத்தின் சதவீதம் __________ ஆக இருக்க வேண்டும்.

(A) Nil
இல்லை

(B) 4%
4%

(C) 1.5%
1.5%

(D) 6%
6%

50. Advances and deposits recovered and loans taken or recovered shall not be deemed to be __________ for the purpose of arriving at the assessable income of a Religious Institution.

அறநிறுவனங்களில் வசூலிக்கப்பட்ட முன் பணம் மற்றும் வைப்புத் தொகைகள் மற்றும் வசூலிக்கப்பட வேண்டிய அல்லது திருப்பப்பட வேண்டிய கடன்கள் நிகர வருமான கணக்கீட்டிற்கு __________ என எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

(A) Income
வருவாய்

(B) Receipt
வரவு

(C) Capital
மூலதனம்

(D) Asset
சொத்து

51. __________ is responsible for the grant of certified copies pertaining to his Department

தனது துறையினை சார்ந்த ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் வழங்குவதற்கு __________ க்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

(A) the Joint commissioner
இணை ஆணையர்

(B) the Assistant commissioner
உதவி ஆணையர்

(C) the commissioner
ஆணையர்

(D) the Auditor
தணிக்கையாளர்

52. __________ shall not be levied on application for the return of documents

ஆவணங்களை திரும்ப அளிக்க வேண்டும் விண்ணப்பங்களின் மீது __________ விதிக்கப்பட மாட்டாது.

(A) Search fee
தேடுதல் கட்டணம்

(B) Postage charges
தபால் கட்டணம்

(C) Court fees
நீதிமன்ற கட்டணம்

(D) Stamp duty
முத்திரை வரி

53. The trustee of the Institution shall be responsible for making all __________ whether in cash or in kind

அறநிறுவனங்களின் அறங்காவலர்கள் ரொக்கமாகவோ அல்லது வேறு வகையிலோ __________ வசூலிக்கப்பட பொறுப்பானவர்கள் ஆவார்கள்.

(A) Rent collection
வாடகை வசூல்

(B) Collection of Income
வருவாய் வசூல்

(C) Kannikkai receipts
காணிக்கை வரவு

(D) Recovery of advances
முன்பணங்கள் வசூல்

54. The __________ of a Religious Institution shall be in the custody of the Executive officer

அறநிறுவனங்களின் __________ செயல் அலுவலரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

(A) Miscellaneous Receipt
பலவகை ரசீது

(B) Vouchers
செலவுச் சீட்டு

(C) Cheque book
காசோலை புத்தகம்

(D) Rent receipts
வாடகை ரசீது

55. The second account of a religious Institution shall be opened and operated by the

அறநிறுவனங்களின் இரண்டாம் கணக்கு __________ ஆல் இயக்கப்பட வேண்டும்.

(A) Executive officer
செயல் அலுவலர்

(B) Chairman, Board of trustees
தலைவர், அறங்காவலர் குழு

(C) Assistant commissioner
உதவி ஆணையர்

(D) Fit person
தக்கார்

56. Any person having a claim against the Religious Institution shall present a __________ containing the details of the claim and of the dates on which the claim fell due

அறநிறுவனங்களுக்கு எதிராக எவரேனும் கோரிக்கை வைத்திருத்தால் அதன் விபரங்கள் மற்றும் கோரிக்கைகள் வழங்கப்பட வேண்டிய தேதிகளின் விபரங்கள் அடங்கிய __________ ஐ சமர்ப்பிக்க வேண்டும்.

(A) Receipt
ரசீது

(B) Duly signed bill
முறையாக கையொப்பமிட்ட ரசீது

(C) Voucher
செலவுச் சீட்டு

(D) Temporary receipt
தற்காலிக ரசீது

57. Who is the competent authority to order write off for amounts exceeding Rs. 1,000/- but not exceeding Rs. 10,000/- of any Religious Institution?

அறநிறுவனங்களில் ரூ. 1,000/– க்கும் மேலும் ரூ. 10,000/– க்கும் மிகாமல் உள்ள தொகையினை தள்ளுபடி செய்ய அதிகாரம் படைத்த அலுவலர் யார்?

(A) the Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) the Joint commissioner
இணை ஆணையர்

(C) the commissioner
ஆணையர்

(D) the Government
அரசு

58. Any money received as __________ shall be lodged separately and not withdrawn unless required for being refunded or adjusted.

அறநிறுவனங்களில் __________ தலைப்பின் கீழ் பெறப்படும் தொகைகள் அவற்றை திருப்பப்படவோ அல்லது ஈடு செய்யப்படவோ உள்ள காரணங்கள் இன்றி இதர காரணங்களுக்காக பயன்படுத்தப்படாமல் தனியே வைக்கப்பட வேண்டும்.

(A) Kanikkai
காணிக்கை

(B) Loan
கடன்

(C) Advance
முன்பணம்

(D) Deposit
வைப்புத் தொகை

59. Any money realised by sale of immovable properties shall be invested separately and shall not be withdrawn without

அறநிறுவனங்களின் அசையா சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்படும் தொகைகள் தனியே முதலீடு செய்யப்பட வேண்டும் மற்றும் மேற்படி தொகைகள் __________ இன்றி திரும்ப பெறப்பட கூடாது.

(A) Previous permission of the Commissioner
ஆணையரின் முன் அனுமதி

(B) Previous permission of the Government
அரசின் முன் அனுமதி

(C) Previous permission of the Joint Commissioner
இணை ஆணையரின் முன் அனுமதி

(D) Previous permission of the Assistant Commissioner
உதவி ஆணையரின் முன் அனுமதி

60. __________ shall ordinarily be conducted in the place in which the property is situate or the rights exist

அறநிறுவனங்களின் __________ பொதுவாக சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலோ அல்லது உரிமங்கள் உள்ள இடத்திலோ நடத்தப்பட வேண்டும்.

(A) Auction
ஏலம்

(B) Lease
குத்தகை

(C) Negotiation
பேச்சுவார்த்தை

(D) Lease agreement
குத்தகை பத்திரம்

61. The auction of all leases shall be conducted within __________ from the date of the decision of the board of trustees.

அறநிறுவனங்களில் அனைத்து குத்தகைகளுக்குமான ஏலம் அறங்காவலர் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட __________ க்குள் நடத்தப்பட வேண்டும்.

(A) 15 days
பதினைந்து நாட்கள்

(B) One month
ஒரு மாதம்

(C) Two months
இரண்டு மாதங்கள்

(D) Three months
மூன்று மாதங்கள்

62. Where the auction is conducted by the Executive officer a copy of ———— shall be sent to the trustees atleast 3 days before the date fixed for auction

அறநிறுவனங்களின் ஏலம் செயல் அலுவலரால் நடத்தப்படுமாயின் அதன் விவரங்கள் அடங்கிய ________ ஏலம் நடத்துவதற்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னர் அறங்காவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(A) Auction Notice
ஏல அறிவிப்பு

(B) Advertisement
விளம்பரம்

(C) Department order
துறை உத்தரவு

(D) Details of leasees
குத்தகைதாரர் விவரம்

63. Leases shall ordinarily be given to the

பொதுவாக குத்தகைகள் ________க்கு வழங்கப்பட வேண்டும்.

(A) Trustee
அறங்காவலர்

(B) Servant of Religious Institution
அறநிறுவனங்களின் பணியாளர்கள்

(C) Highest Bidder
உயர்ந்த கேள்விதாரர்

(D) Local people
உள்ளூர் மக்கள்

64. The remission of rent not exceeding Rs. 500/- in respect of Religious Institution shall be granted by

அறநிறுவனங்களின் ரூ.500/– க்கும் மிகாத வாடகை தள்ளுபடி ________ ஆல் வழங்கப்படலாம்.

(A) the Hereditary Trustee
பரம்பரை அறங்காவலர்

(B) the Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) the Joint Commissioner
இணை ஆணையர்

(D) the Commissioner
ஆணையர்

65. The provisions of rules relating to lease by public auction and remission shall not apply to

பொது ஏலம் மூலம் குத்தகைகள் மற்றும் வாடகை தள்ளுபடி குறித்தான விதிகள் ________ க்கு பொருந்தாது.

(A) Maths and specific endowments attached to maths
மடங்கள் (ம) மடங்களுடன் இணைக்கப்பட்ட குறிப்பிட்ட அறநிலையங்கள்

(B) Senior grade Institutions
முதுநிலை திருக்கோயில்கள்

(C) Non-listed Religious Institutions
பட்டியலில் சேராத அறநிறுவனங்கள்

(D) Specific endowments
குறிப்பிட்ட அறநிலையங்கள்

66. The four rent of Religious Institutions shall be fixed in accordance with the market value of the land and the cost of the building worked out as per the code of the

அறநிறுவனங்களின் நியாய வாடகை __________ தொகுப்பில் உள்ளவாறு நிலங்களின் சந்தை மதிப்பின் படியும் கட்டிடங்களின் மதிப்பின்படியும் கணக்கீடு செய்யப்பட்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(A) Revenue department
வருவாய் துறை

(B) Highways department
நெடுஞ்சாலை துறை

(C) Public works department
பொதுப் பணித்துறை

(D) Finance Department
நிதித் துறை

67. The auditor should verify in respect of building works whether __________ was done before final payment to the contractor.

அறநிறுவனங்களின் கட்டிட வேலைகளை பொறுத்தமட்டில் ஒப்பந்ததாரருக்கு இறுதி பட்டுவாடா தொகை வழங்குவதற்கு முன் __________ செய்யப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையில் சரிபார்க்க வேண்டும்.

(A) Measurement
அளவீடு

(B) Check – Measurement
மேல் அளவீடு

(C) Revised estimate
திருத்திய மதிப்பீடு

(D) Completion report
முடிவறிக்கை

68. Every Executive officer appointed for a Religious Institution shall furnish security and execute a security bond in the name of the

அறநிறுவனங்களில் நியமனம் செய்யப்படும் செயல் அலுவலர்கள் __________ பெயரில் பிணையத் தொகை மற்றும் பிணையப் பத்திரம் செலுத்த வேண்டும்.

(A) Religious Institution
அறநிலையத்தின்

(B) Government
ஆணையரின்

(C) Government of Tamil Nadu
தமிழ்நாடு அரசின்

(D) Trustee
அறங்காவலரின்

69. In case of Thiruppani works ―――――― may be alone only for non-granite structures which do not contain any inscriptions or other sculptural works.

திருப்பணி வேலைகளில் ―――――― வேலைகள் கல்வெட்டுகள் மற்றும் சிற்ப வேலைகள் இல்லாத கிரானைட் அல்லாத கட்டமைப்புகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) White-washing and painting
சுண்ணாம்பு மற்றும் வர்ணம் தீட்டுதல்

(B) Cement works
சிமெண்ட் வேலைகள்

(C) Suthai works
சுதை வேலைகள்

(D) Grill works
இரும்பு கிரீல் வேலைகள்

70. The Thiruppani works of the Religious Institution executed by a worshipper or other person with the permission of the appropriate authority is called

அறநிறுவனங்களில் வழிபடுபவர் மற்றும் வேறு நபர்களால் உரிய அலுவலரின் அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டால், அவ்வேலைகள் ―――――― என அழைக்கப்படும்.

(A) Departmental work
துறை சார்ந்த பணி

(B) Donor work
நன்கொடையாளர் பணி

(C) Contract work
ஒப்பந்ததாரர் பணி

(D) Civil work
கட்டிட வேலை

71. ―――――― shall attend to the correspondence and maintenance of accounts relating to the collection of donation etc. and expenditure incurred out of them.

திருப்பணி தொடர்பான கடித போக்குவரத்து மற்றும் திருப்பணி நன்கொடைகள் மற்றும் அதிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவுகளுக்கான கணக்குகளை ―――――― ஆல் பேணப்பட வேண்டும்.

(A) The President, Thiruppani Committee
தலைவர், திருப்பணி கமிட்டி

(B) The Secretary, Thiruppani Committee
செயலாளர் திருப்பணி கமிட்டி

(C) The Member, Thiruppani Committee
உறுப்பினர் திருப்பணி கமிட்டி

(D) The Treasurer, Thiruppani Committee
பொருளாளர், திருப்பணி கமிட்டி

72. The collections received for Thiruppani works of a Religious Institution shall be deposited in a separate bank account opened for the purpose in the name of the concerned temple as

அறநிறுவனங்களின் திருப்பணி வேலைகளுக்காக பெறப்படும் தொகைகள் சம்பந்தப்பட்ட திருக்கோயிலின் பெயரில் இயக்கப்படும் தனி வங்கிக் கணக்கில் __________ என்ற பெயரில் செலுத்தப்பட வேண்டும்.

(A) Temple Thiruppani fund
திருக்கோயில் திருப்பணி நிதி

(B) Temple works fund
திருக்கோயில் வேலைகளுக்கான நிதி

(C) Temple Repair fund
திருக்கோயில் மராமந்து நிதி

(D) Temple miscellaneous fund
திருக்கோயில் பலவகை நிதி

73. The conditions for the payment of travelling allowance, daily allowance and mileage charges to trustees of religious Institutions shall be as laid down in the

அறநிறுவனங்களில் அறங்காவலர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி, தினப்படி மற்றும் மைலேஜ் கட்டணங்கள் முதலியன __________ ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டதாகும்.

(A) Tamil nadu financial code
தமிழ்நாடு நிதி தொகுப்பு

(B) Tamil nadu Treasury code
தமிழ்நாடு கருவூல தொகுப்பு

(C) Tamilnadu Travelling Allowance Rules
தமிழ்நாடு பயணப்படி விதிகள்

(D) Manual of Accounts
கணக்கு நடைமுறை நூல்

74. The rules under section 116 (2) (XXIII) of Hindu Religious and charitable Endowments Act 1959 shall not apply to

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 116(2)(XXIII) ன் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகள் __________ க்கு பொருந்தாது.

(A) Servants of religious Institution
அறநிறுவனங்களின் பணியாளர்கள்

(B) Managers of Religious Institution
அறநிறுவனங்களின் மேலாளர்கள்

(C) Ulthurai servants of Religious Institution
அறநிறுவனங்களின் உள்துறை பணியாளர்கள்

(D) Executive officers of Religious Institution
அறநிறுவனங்களின் செயல் அலுவலர்கள்

75. If the appointing authority decides that the probationer is not suitable for full membership of the service he may by order

நியமன அலுவலரால் தகுதிகாண் பருவத்தினர் தாங்கள் வகிக்கும் பதவிக்கு தம்மை முழுமையாக தகுதியாக்கி கொள்ளவில்லை என முடிவெடுக்கப்பட்டால் அப்பணியாளரை ________ உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம்.

(A) Discharge him from service
பணியிலிருந்து வெளியேற்ற

(B) Place him under suspension
இடைநீக்கம் செய்ய

(C) Initiate disciplinary proceedings
ஒழுங்கு நடவடிக்கை தொடர

(D) Hold an enquiry
விசாரணை மேற்கொள்ள

76. ________ shall not be entitled to any leave other than casual leave.

அறநிறுவனங்களில் ________ க்கு தற்செயல் விடுப்பினை தவிர வேறு எந்த விடுப்பும் அளிக்கப்பட மாட்டது.

(A) the Executive officer
செயல் அலுவலர்

(B) the hereditary servant
பரம்பரை ஊழியர்

(C) the outdoor servant
வெளித்துறை பணியாளர்

(D) the Manager
மேலாளர்

77. ________ in respect of all outdoor servants shall be maintained by the Executive officers in the Institutions

அறநிறுவனங்களின் வெளித்துறை பணியாளர்களுக்கு செயல் அலுவலர்களால் ________ பேணப்பட வேண்டும்.

(A) Probation sheets
தகுதிகாண் பருவ தாள்கள்

(B) Defaulter sheets
பிழை திருத்தி தாள்கள்

(C) Increment register
ஊதிய உயர்வு பதிவேடு

(D) Personal files
தனிப்பட்ட கோப்புகள்

78. The amount of security to be furnished by any officer or servant shall be fixed by the

அறநிறுவனங்களின் அலுவலர் மற்றும் பணியாளர்கள் பிணையத் தொகை எவ்வளவு செலுத்தப்பட வேண்டும் என்பது ________ ஆல் முடிவு செய்யப்படும்.

(A) Government
அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Appointing authority
நியமன அலுவலர்

(D) Board of trustees
அறங்காவலர் குழு

79. ____________ is not applicable to the servants of maths and specific endowments attached to maths.

மடங்கள் மற்றும் மடங்களை சார்ந்த குறிப்பிட்ட அறநிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ____________ பொருந்தாது.

(A) Family benefits fund scheme
குடும்ப நல நிதி திட்டம்

(B) Maintenance of service Register
பணிப்பதிவேடு பேணுதல்

(C) Furnishing of security
பிணையத் தொகை செலுத்துதல்

(D) Payment of gratuity
பணிக்கொடை வழங்குதல்

80. Every temporary hundial or receptable installed for festivals or other occasion shall be sealed by

அறநிறுவனங்களில் பண்டிகை மற்றும் இதர விழாக்களின் போது நிறுவப்படும் தற்காலிக உண்டியல்கள் ____________ னால் சீல் வைக்கப்படும்.

(A) the Executive officer
செயல் அலுவலர்

(B) the trustee
அறங்காவலர்

(C) the Inspector
ஆய்வாளர்

(D) the Assistant commissioner
உதவி ஆணையர்

81. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959 ratification of expenditure incurred in religious Institutions has to be got by the trustees?

1959 ஆம் வருட இந்து சமய அறநிலையச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அறநிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு பின்னேற்பு அங்கீகாரம் பெறப்பட வேண்டும்?

(A) Section 86 (1)
சட்டப்பிரிவு 86(1)

(B) Section 86 (6)
சட்டப்பிரிவு 86(6)

(C) Section 80
சட்டப்பிரிவு 80

(D) Section 82
சட்டப்பிரிவு 82

82. The Hindu Religious and charitable Endowments Act 1959 applies to

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு பின்வருவனவற்றுள் எவற்றிற்கு பொருந்தும்?

(A) Hindu public Religious Institutions and Endowments
இந்து மதத்தை சார்ந்த பொது மத நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்கள்

(B) Hindu Religious and charitable Endowments Departments
இந்து சமய அறநிலையத்துறை

(C) Sabhas
சபாக்கள்

(D) Trusts
அறக்கட்டளைகள்

83. The alterations, omissions or additions of property Register of religious Institutions has to be carried out

அறநிறுவனங்களின் சொத்துப் பதிவேட்டில் மாற்றங்கள், சேர்த்தல் நீக்கல் பட்டியல் __________ மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) Once in ten years
பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

(B) Once in five years
ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

(C) Every year
வருடா வருடம்

(D) Once in three years
மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை

84. Under section 40(9) of Hindu religious and charitable Endowments Act 1959, any Hindu unmarried female who is dedicated for service in temple is called

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 40(9) ன் கீழ் திருக்கோயில்களின் சேவைகளுக்காக அற்ப்பணிக்கப்படும் திருமணமாகாத பெண்கள் __________ என அழைக்கப்படுவர்.

(A) Devadasi
தேவதாசிகள்

(B) Poojari
பூசாரிகள்

(C) Thiruvalagu
திருவலகு

(D) Assistant
உதவியாளர்கள்

85. In case of non-listed Religious Institution ____________ is vested with the powers to appoint trustees and fit persons.

பட்டியலில் சேராத அறநிறுவனங்களை பொறுத்தமட்டில் அறங்காவலர் மற்றும் தக்காரை நியமனம் செய்யம் அதிகாரம் ____________ க்கு அளிக்கப்பட்டுள்ளது.

(A) the Joint Commissioner
இணை ஆணையர்

(B) the Commissioner
ஆணையர்

(C) the Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) the Government
அரசு

86. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959, the appropriate authority shall have power to suspend, remove or dismiss trustees.

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அறங்காவலர்கள் இடைநிறுத்தம், நீக்கம் (அ) பதவி நீக்கம் உரிய அதிகாரம் படைத்த அலுவலர்களால் செய்யப்படலாம்.

(A) Section 53
சட்டப்பிரிவு 53

(B) Section 50
சட்டப்பிரிவு 50

(C) Section 51
சட்டப்பிரிவு 51

(D) Section 49
சட்டப்பிரிவு 49

87. The trustee of every Religious Institutions shall keep regular accounts of all

அறநிறுவனங்களின் அறங்காவலர்கள் ஒவ்வொரு பணிக்குமான ____________ குறித்து முறையான கணக்குகள் பேணப்பட வேண்டும்.

(A) Receipts and disbursements
வரவு மற்றும் செலவுகள்

(B) Assets and liabilities
சொத்து மற்றும் பொறுப்புகள்

(C) Details of donation
நன்கொடை விவரங்கள்

(D) Details of savings
சேமிப்பு விவரங்கள்

88. The Executive officer appointed by the commissioner shall be a person

இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையரால் நியமிக்கப்படும் செயல் அலுவலர்கள் __________ ஆக இருத்தல் வேண்டும்.

(A) Who has completed B.L. Degree
சட்டக் கல்வி முடித்தவராக

(B) Professing the Hindu Religion
இந்து மதத்தை சார்ந்தவராக

(C) Who has obtained vedic training
வேதங்கள் குறித்து பயிற்சி பெற்றவராக

(D) Who has practised law for ten years
பத்து ஆண்டுகள் சட்டத் தொழிலாற்றியவராக

89. No injunction shall be granted by any court in respect of any proceedings taken or about to be taken by the joint commissioner under __________ of the Hindu Religious and charitable Endowments Act 1959.

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய __________ ன் கீழ் ஆக்கிரமிப்பை வெளியேற்றுதல் குறித்த இணை ஆணையரின் உத்தரவில் நீதிமன்றம் தலையிட முடியாது.

(A) Section 78
சட்டப் பிரிவு 78

(B) Section 77
சட்டப் பிரிவு 77

(C) Section 71
சட்டப் பிரிவு 71

(D) Section 72
சட்டப் பிரிவு 72

90. The auditors appointed to the Hindu Religious and charitable Endowments department shall be public servants within the meaning of section 21 of the __________

இந்து சமய அறநிலையத் துறையில் நியமிக்கப்படும் தணிக்கையாளர்கள் __________ சட்டத்தின் பிரிவு 21 ன் படி பொது ஊழியர்களாக இருத்தல் வேண்டும்.

(A) H.R. & C.E. Act 1959
இந்து சமய அறநிலையச் சட்டம் 1959

(B) Indian penal code
இந்திய தண்டனைச் சட்டம்

(C) Tamil Nadu financial code
தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு

(D) Civil service Rules
குடிமைப் பணி விதிகள்

91. Religious and charitable Endowments Administration fund shall vest in the
சமய நிறுவனம் மற்றும் அறநிலையங்களின் நிர்வாக நிதியினை __________ ஆல் கையாளப்படும்.

(A) Commissioner
ஆணையர்

(B) Joint commissioner
இணை ஆணையர்

(C) Additional commissioner
கூடுதல் ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

92. The properties and funds of the unincorporated Devaswoms shall not be utilised except
சுசீந்திரம் இணைக்கப்படாத திருக்கோயில்களின் அசையா சொத்துக்கள் மற்றும் நிதிகள் __________ ஐ தவிர இதர நோக்கங்களுக்காக பயன்படுத்தக் கூடாது.

(A) For the purpose of those Devaswoms
சம்பந்தபட்ட இணைக்கப்படாத திருக்கோயில்களின் நோக்கங்களுக்காக

(B) For the purpose of Palani temple
பழனி திருக்கோயில்களின் நோக்கங்களுக்காக

(C) For the purpose of Charities
தர்ம காரியங்களுக்காக

(D) For the purpose of feeding the poor
ஏழை மக்களுக்கு உணவளிப்பதற்காக

93. __________ shall be the counter signing and drawing officer for Travelling Allowance bills of the members of the Advisory committee
ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் பயணப்படி பட்டியல்களுக்கான மேலொப்பம் மற்றும் பணம் ஈர்க்கும் அதிகாரம் __________ க்கு வழங்கப்பட்டுள்ளது.

(A) the joint commissioner
இணை ஆணையர்

(B) the assistant commissioner
உதவி ஆணையர்

(C) the commissioner
ஆணையர்

(D) the Deputy commissioner
துணை ஆணையர்

94. __________ shall submit a report is detail about the jewels and valuables appraised, to the commissioner
அறநிறுவனங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நகைகள் மற்றும் இதர விலை உயர்ந்த பொருட்களுக்கான அறிக்கை __________ ஆல் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்படும்.

(A) the verification officer
நகைகள் சரிபார்க்கும் அலுவலர்

(B) the Executive officer
செயல் அலுவலர்

(C) the trustee
அறங்காவலர்

(D) the Assistant officer
உதவி ஆணையர்

95. Audit wing in the Hindu Religious and charitable Endowments Departments is an ________ using under the immediate control of the chief Audit officer and under the ultimate control of the commissioner.

இந்து சமய அறநிலையத் துறையின் தணிக்கைப் பிரிவு தலைமை தணிக்கை அலுவலரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழும், ஆணையரின் இறுதியான கட்டுப்பாட்டின் கீழும் செயல்படும் ________ பிரிவாகும்.

(A) Effective
திறம்பட

(B) Independent
சார்பற்ற

(C) Efficient
திறமையான

(D) Innovative
புதுமையான

96. Whenever necessary the commissioner may consult ________ regarding any building work.

அறநிறுவனங்களின் கட்டிட வேலைகளை பொறுத்தமட்டில் தேவை ஏற்படும் போது ஆணையர் ________ ன் ஆலோசனையினை பெறலாம்.

(A) Public works Department
பொதுப்பணித்துறை

(B) Archaeological survey of India
இந்திய தொல்லியல் துறை

(C) Finance department
நிதித்துறை

(D) Revenue Department
வருவாய் துறை

97. In the case of temples requiring renovation and in need of donations from the public ________ shall be formed.

பொது மக்ககளின் நன்கொடை வாயிலாக சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டிய அறநிறுவனங்களில் ________ அமைக்கப்பட வேண்டும்.

(A) Advisory Committee
ஆலோசனை குழு

(B) District committee
மாவட்ட குழு

(C) Trust board
அறங்காவலர் குழு

(D) Thiruppani committee
திருப்பணி குழு

98. ________ shall be kept under double lock with locks of atleast two different patterns.

அறநிறுவனங்களில் ________ இரண்டு வெவ்வேறு விதமான பூட்டுகள் கொண்ட இரட்டை பூட்டு முறையில் வைக்கப்பட வேண்டும்.

(A) Permanent Hundial
நிரந்தர உண்டியல்

(B) Temporary Hundial
தற்காலிக உண்டியல்

(C) Special Hundial
சிறப்பு உண்டியல்

(D) Pot Hundial
பானை உண்டியல்

99. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959, the Religious Institutions has to pay an annual contribution to the Government

1959 ஆம் வருட இந்து சமய அறநிலைய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அறநிறுவனங்கள் அரசுக்கு ஆண்டு பங்களிப்பினை செலுத்த வேண்டும்

(A) Section 90
சட்டப் பிரிவு 90

(B) Section 92
சட்டப் பிரிவு 92

(C) Section 94
சட்டப் பிரிவு 94

(D) Section 96
சட்டப் பிரிவு 96

100. Under which section of the Hindu Religious and charitable Endowments Act 1959 utilisation of surplus funds can be made?

1959 ஆம் வருட இந்து சமய அறநிலையச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அறநிறுவனங்களின் உபரி நிதிகள் பயன்படுத்தப்படலாம்

(A) Section 34
சட்டப் பிரிவு 34

(B) Section 36
சட்டப் பிரிவு 36

(C) Section 35
சட்டப் பிரிவு 35

(D) Section 38
சட்டப் பிரிவு 38

---